Nallur Branch Library

# அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 21 இதழ் 83
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-5-1994

## நாளை விவாதம்

(கொழும்பு)
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையிலான ஐ. தே. க. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளன. இந்தப்பிரேரணை தொடர்பான விவாதமும் வாக்கெடுப்பும் நாளை நடைபெறவுள்ளன.

இலங்கை சுதந்திரக் கட்சியும் மற்றும் மூன்று கட்சிகளும்
(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி நோக்கி படையினர் நகர்வு

(கொழும்பு)
வவுனியா விமானப்படைத் தளத்திலிருந்து ஹெலிகொப்டர்மூலம் பெருமளவு இராணுவத்தினர் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனராம்.

வடக்கிலுள்ள இராணுவத் தளங்களில் தற்போது படையினரின் தொகை அதிகரித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## ● அனைவரும் ஒன்றுபட வேண்டும்

# “இனப் பிரச்னை தீர்விலே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது”

## ஜனாதிபதி டி. பி. கருத்து

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பிரச்னையின் தீர்வில்தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. இப்பிரச்னைக்கு இன, மத, மொழி வேறுபாடின்றி தீர்வு காண அனைவரும் முயலவேண்டும். இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஜனாதிபதி மேலும் கூறுகையில் வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு ஒன்றுபட்டுத் தீர்வு காண அனைவரும் முயலவேண்டும். நாம் இன்று வடக்குகிழக்குப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டியவர்களாக இருக்கிறோம். நாட்டின் முக்கியமான பிரச்னைக்கு தீர்வு காண்பதிலேதான் இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது என்றும் கூறினார். நாடாளுமன்ற சர்வகட்சி
(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விமானத் தாக்கு

(கொழும்பு)
வவுனியா ஓமந்தைக்கு அருகில் விமானப் படையினரின் தாக்குதல் விமானங்கள் நேற்று கடும் குண்டுவீச்சுக்களை நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

## கரையோரங்களில் விமான நோட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டின் கரையோரப்பகுதிகளில் ஹெலிகொப்டர் ஒன்று நேற்றுக் காலை நோட்டமிட்டுச் சென்றது.

கரையோரப் பகுதியில்
(4-ம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைகழகத்தை திறக்க கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக்கழகத்தை உடன் திறக்குமாறு கோரியும், தமது கல்வியைத் தொடர்வதற்கு வசதி செய்து தருமபடி கோரியும் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பகல் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்தனர்.

கொழும்பு யூனியன் பிளேசிலுள்ள விடுதியின் சந்திக்கருகில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அனைத்து இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட
(4-ம் பக்கம் பார்க்க)

## மேலின அறிவிப்பை அமுல்படுத்த பணிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா நேற்று நாட்டு மக்களுக்கு தாம் அறிவித்திருந்த நிவாரண நடவடிக்கைகளை அமுல் செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களைப் பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி. எச். ஜே. விஜேதாச, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இதனை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நிவாரண அறிவிப்புகள் வருமாறு:

மாதாந்தம் 12ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த சம்பளம் பெறும் தனியார்துறை ஊழியர்களுக்கு உழைக்கும்போதே வரி செலுத்தும் முறைக்கு
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை வழமைபோன்று நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அரசின் திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றில் நிராகரிப்பு

(கொழும்பு)
அரசாங்கத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தொகை பொருள் திருத்தச்சட்ட மூலம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணாக இருப்பதால் அதை அமுல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று சர்வஜனவாக்கெடுப்பு மூலம் அனுமதிபெறவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது நேற்று நாடாளுமன்றத்தில் உயர்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பை
(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு மாதங்களில் 68 தமிழர் பலி!

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் கடந்த நான்கு மாதத்தில் மட்டும் படையினரின் தாக்குதல்களில் 68 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 40க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலர் அங்கவீனமடைந்துள்ளனர். படையினரின் தாக்குதலின் போது அதிகளவில் மீன்பிடித் தொழிலாளர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

விமானக்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் மற்றும் கடற்படையினரின் தாக்குதல்களினால் பொதுமக்களின் இருப்பிடங்கள் பல சேதமடைந்துள்ளன. -மி

## தென்னாபிரிக்கஜனாதிபதியாக மண்டேலா தெரிவாவார்!

(ஜொகனஸ்பேர்க்)
தென்னாபிரிக்காவில் நடைபெற்ற தேர்தலில், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஆட்சி அமைப்பதும், திரு. நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாவதும் உறுதியாகிவிட்டது. அக்கட்சி 65 வீத வாக்குகளைப் பெற்று வெற்றிநடை போடுகிறது.

திரு. நெல்சன் மண்டேலா மக்கள் முன் தோன்றி, கைகளை உயர்த்தி வெற்றிச் செய்தியை அறிவித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்

உங்கள் சகல மணிக்கூடுகள் றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, நாவலர் சந்தி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். சகலவிதமான மணிக்கூட்டு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. (ஏ-4058)

### அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

250 நாடகங்கள் எழுதிய அராலியூரின் நாவல் அக்கரைச்சீமையில் 50/- இலங்கை ரூபா. வாழ்ந்து சென்ற எங்கள் குமரன் குமரிகளது கதையான கதை. எங்கும் கிடைக்கும். (இ-994)

### ரகு புகைப்பட கருவி திருத்தகம்

சகல விதமான புகைப்பட கமெராக்களும், உப கருவிகளும், பிளாஷ்கள், ரேஞ் பைண்டர், பைனகுலர்ஸ், டெக், ரூம், வைட், லென்ஸ் வகைகளும் ஏனைய வைகளும் T.V. கமரா உட்பட பூரணமாகத் திருத்திக் கொடுக்கப்படும். ரகு புகைப்படக்கருவி திருத்தகம் (ரகு போட்டோ சேர்விஸ்) 801, கஸ்தூரியார் வீதி (மேற்கு) யாழ்ப்பாணம். (இ-1001)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## பனிப்பூச்சி தாக்கம்

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மிளகாய்ச் செடிகள் பனிப்பூச்சியின் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கின்றன.

லெபேசிட் அல்லது பென்டிலோன் கிருமி நாசினியை ஒரு அவுன்ஸ் மூன்று கலன் தண்ணீரில் கலந்து தெளிக்குமாறு தொல்புரம் விவசாய சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார். -154

## குருபூசை

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கத்தினர் ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 5-00 மணி முதல் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசையை கொண்டாடுகின்றனர். இவ் வைபவத்தில் இலக்கிய விரிவுரையாளர் திரு. எஸ். இராசநாயகத்தின் சிறப்புச் சொற்பொழிவும் ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச்சங்க மாணவர்களின் பண்ணிசையும் இடம்பெறும். 71

# நிவாரணம் எதுவுமின்றி மீனவர்கள் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீனவர்களுக்கான 2ம் கட்ட நிவாரணம் இன்னும் வழங்கப்படாததினால் ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக கடற்தொழிலாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்த நிவாரணத்துக்கான பொருட்கள் உரியநேரத்துக்கு சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விட்டது ஆனால் இப்பொருட்களை மீனவர்களுக்கு வழங்கி வருகின்றனர் உரியவாறு யாழ். செயலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரி மூலம் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. வீ-இ

# 165 சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் போஷாக்கு குறைந்த 165 சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டு போஷாக்கு உணவு வகைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இப்பிரிவிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இருந்தே மேற்படி 165 சிறுவர், சிறுமியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு முதல்கட்டமாக பூச்சி மருந்துகள் கொடுக்கப்பட்ட பின்பு திரிபோஷா, இலைக்கஞ்சி போன்ற சத்துணவுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இதற்கான பூச்சி மருந்துகளை தனது செலவில் பெற்று வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்கள் சத்துணவுகளை வழங்க முன்வந்துள்ளன. 72-இ

# வீடமைப்பு திட்டத்திற்கு 7000 ரூபா உதவி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தூயமானிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 7000 ரூபா வழங்கப்படவுள்ளது.

உடன்மேவு காணி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 15 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை வீடமைப்புக் கடன் திட்டத்தின்கீழ் இப்பிரிவில் ஒரு குடும்பத்திற்கு மட்டும் 16 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதில் முதல் கட்டமாக 4 ஆயிரம் ரூபா அண்மையில் இக்குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. -72-இ

## ஆதாரம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் 12வது இதழ் பங்குனி - சித்திரை மாத வெளியீடாக வெளிவந்துள்ளது.

இவ்விதழில் தமிழீழ மக்களை பட்டினி போடவைக்கும் தமிழீழ பொருண்மிய வளங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத்தொழில், ஆய்வுகளை ஆயிரமிப்பை உடைத்தெறிவோம், யாழ் மாவட்டத்தில் சிறைச்சாலை

(4-ம் பக்கம் பார்க்க)


# கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்,

## வலயம் - 1 - முறைசாரக் கல்விப் பிரிவுகளில்

## மாணவர்களை அனுமதித்தல்

யாழ். மாவட்டத்தில் வலயம் 1இல் உள்ள பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக்கல்விப் பிரிவுகளில் பாடசாலையை விட்டு விலகியோருக்காக நடத்தப்படும் தொழிற்திறன் விருத்திப் பயிற்சி நெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப்பயிற்சி நெறிகளைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைக் குறித்த பாடசாலை அதிபரிடம் 15-05-94க்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பிக்கும் ஒருவர் ஒரு பாடநெறியை மட்டும் கற்பதற்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சிக்காலம் 8 மாதங்கள் ஆகும். பயிற்சி முடிவில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்து, செய்முறைப் பரீட்சையில் தோற்றி சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்:

| கோட்டம் | பாடசாலை | பாடநெறி |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா/வண்ணை நாவலர் ம. வித். | 1. படவரைஞர் |
| | | 2. வைப்பணப்பொருள் உற்பத்தி |
| | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி | 1. தொலைக்காட்சி திருத்துதல் |
| | | 2. மோட்டார் திருத்துதல் |
| | யா/இந்திய கல்லூரி | 1. குளிரூட்டி திருத்துதல் |
| நல்லூர் | யா/கனகரத்தினம் ம.ம. வித். | 1. உடையமைத்தல் |
| | | 2. மோட்டார் வாகனம் பழுது பார்த்தல் |
| | | 3. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | யா/கொக்குவில் இந்துக் கல். | 1. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | யா/முத்துத்தம்பி ம. வித் | 1. தேசப் பொருள் உற்பத்தி |
| சாவகச்சேரி | யா/டிறிபேக் கல்லூரி | 1. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | | 2. உடையமைத்தல் |
| | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித். | 1. மோட்டார் வாகனங்களின் மின் இணைத்தல் |
| | யா/வைதிக விக்னேஸ்வரா வித். | 1. உணவு பதனிடல் |
| வேலணை ஊர்காவற்றுறை | யா/சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம. ம. வித். | 1. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | | 2. புத்தகம் கட்டுதல் |
| | | 3. கடல் உணவு பதனிடல் |

கல்வித்தகைமைகள் :

1. ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து : க. பொ. த. (சா/த) சித்தி ஆங்கில பாடத்தில் 'சி' தரம் இருத்தல் வேண்டும்.
2. படவரைஞர் பயிற்சி ஆங்கில மொழி மூலம் : கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் 'சி' தரம் உட்பட க. பொ. த. (சா/த) சித்தி.
3. தொலைக்காட்சி திருத்துதல்: ஏற்கனவே வானொலி திருத்துதல் நெறியைக் கற்றவர்களுக்கு மட்டும்: அத்துடன், கணிதம், விஞ்ஞானம், உட்பட க. பொ. த. (சா/த) சித்தி.
4. தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி : தமிழ் 'சி' தரம் உட்பட க. பொ. த. (சா/த) சித்தி.
5. ஏனைய பாடநெறிகள்: தரம் 8 சித்தி.

பொது:

1. வேறு அரச கல்வி நிறுவனங்களில் தற்சமயம் கற்றுக் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பித்தல் ஆகாது.
2. பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர் பாடசாலையை விட்டு விலகியவராக இருப்பதோடு, பயிற்சிக்காலத்தில் விடுகைப் பத்திரத்தைப் பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
3. மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பாடசாலை அதிபரிடம் பார்வையிடலாம்.

(ஏ 4057)

## தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம்

# நூல் வெளியீடு

அன்புடையீர்

எமது ஆதீனத்தால் புதிதாக வெளிவர இருக்கும் இரு நூல்களான

**யாழ்ப்பாணத்து தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள்**
- பேராசிரியர் கலாநிதி S. ஜெபநேசன்.

**'மகதலேனா மரியாள்'**
(குறுங்காவியம்)
- நாவேந்தன்

வெளியீட்டு நிகழ்வு

**05 05 1994 மாலை 3-00 மணி**

யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(யாழ். பொது மருத்துவமனை முன்பாக)
464, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

அ. ஜெயக்குமாரன்
செயலாளர் தெ. இ. திருச்சபை
யாழ். ஆதீனம்.

(ஏ-4060)

